REGD. No. M. 6311

தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 232

PHONE No.: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: மாசி 29உ வெள்ளி (12—3—54) ★ ★ ★ வெளியூர்: மாசி 30 சனி (13—3—54)

வட நாட்டுப் பண்டங்கள் தென்னாட்டில் குவிகின்றன!

வெறும் பெட்டியாக 'ரயில் வாகன்கள்' வட நாடு திரும்புகின்றன!

எதிர்கால மக்களை அடமானம் வைத்து சி. ஆர். கடன் வாங்குகிறார்

செலவு கூடுகிறது! விளையும் பயன் குறைகிறது!

மேல்சபை எதிர்கட்சி தலைவர் டாக்டர் ஜான் தகவல்

சென்னை, மார்ச். 11—

"அறிவியல் துறை, கல்வித் துறை, அறநெறித் துறை ஆகிய அனைத்துத் துறைகளிலும் சென்னை மற்ற மாநிலங்களுக்கு வழி காட்டியாக இருப்பது மறுக்க முடியாத உண்மையானாலும், பொருளியல் கண்ணோட்டத்தில் நோக்குகிறபொழுது சென்னை மாநிலம், மற்றப் பின்னடைந்து கிடக்கும் மாநிலங்களில் ஒன்றாகவே இருந்து வருகிறது. சத்துணவு கொள்ள குறைபாடும் இங்கு உள்ளது. வேலையின்மையும் இங்குதான் அதிகரித்துக் கிடக்கிறது."

"1946-ம் ஆண்டிலும் 1953-ம் ஆண்டிலும் சர்க்காருக்குக் கிடைத்திருக்கும் வருமானத்தையும், செலவினத்தையும் புள்ளி விவரங்களுடன் ஒப்பிட்டுக் காட்டி, 1953-ல் சர்க்காரின் செலவு நான்கு மடங்கு கூடியிருக்கிறது என்று விளக்கினார். எடுத்துக்காட்டாக 1938—39-ல் போலீஸ் செலவு ரூ. 169 லட்சமாக இருந்தது; 1953—54-ல் ரூ. 716 லட்சத்திற்கு உயர்ந்திருக்கிறது" என்று சுட்டிக் காட்டினார்.

"வட நாட்டில் இருந்து ஆண்டு ஒன்றுக்கு 150 லட்சம் டன் பண்டங்கள் தென்னாட்டில் இறக்குமதியாகின்றன. ஆனால் தென்னாட்டிலிருந்தோ வட நாட்டிற்கு 50 லட்சம் டன் பண்டங்கள்தான் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. வட நாட்டிலிருந்து பண்டங்களை ஏற்றிவரும் 'கூட்சு வாகன்கள்' வெறும் காலிப் பெட்டிகளாகவே இங்கிருந்துத் திரும்புகின்றன. ஏற்றுமதி செய்யப்படுவதற்கான பொருட்கள் நம்மிடம் ஒன்றுமில்லை."

"தென் பகுதி ரயில்வேயிலும் பிரயாணிகள் போக்குவரத்து ரூ. 1½ கோடிக்குக் குறைந்துபோய் இருக்கிறது. இவ்வளவும், நமது மாநிலத்தின் செல்வ நிலையை எடுத்துக் காட்டுகின்றன."

—மேற்குறித்தவாறு மேல் சபையில் டாக்டர் ஜான் குறிப்பிட்டார். மேலும் அவர் கூறியதாவது:—

அரசியல் விடுதலை நாட்களுக்கு முன் கல்வித் துறையில் நமது சர்க்கார் செலவு செய்து வந்த தொகை இப்பொழுது இரண்டு மடங்குக்குக் கூடி இருந்த போதிலும், 10 சதவிகிதம்தான் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை கூடி இருக்கிறது.

ஆண்டு ஒன்றுக்கு ரூ 10 கோடி வீதம் இந்த சர்க்கார் பொது மக்களிடமிருந்து கடன்பெற்று, எதிர்கால மக்களை அடமானம் வைத்துக் கொண்டு வருகிறது. நமது சர்க்கார் பொது மக்களிடம் பெற்றுள்ள மொத்தக் கடன் தொகை ரூ 60 கோடியாக இருக்கிறது கையிலுள்ள நிதியோ ரூ 62 லட்சமாக இருக்கிறது.

"இப்படி நமது சர்க்கார் கடன் வாங்கிக்கொண்டே போனால், வருங்கால வின் பெரும் பகுதி ஏற்கனவே பட்டுள்ள கடன் தொகைக்கு ஆன வட்டியை கொடுக்க மட்டுமே போதக்கூடியதான ஒரு நிலை ஏற்பட்டுவிடும்."

கல்வி அதிகாரி முன் புதிய கல்வித் திட்டம் தோற்றது!

★

சென்னை, மார்ச்: 12—

செயின்ட் கேபிரியல் இடைநிலை ஆசிரியப் பயிற்சிப் பிரிவின் பாராளுமன்றம் 11—3—54 வியாழன் அன்று மாலை சென்னை மாவட்ட கல்வி அதிகாரி அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

அவ்வமயம் மன்ற கல்வி அமைச்சர் தோழர் அரங்கநாதன் புதிய கல்வித் திட்டத்தைக் கொண்டுவந்து ஆதரித்துப் பேசினார்; மற்றும், தோழர்கள் எஸ். கே. சீனிவாசன், டி. சீனுவாசன், நாராயணப்பெருமாள் முதலியோரும் ஆதரித்துப் பேசினர்.

தோழர்கள் வை. கணேசன், தி. ரா. செல்வராசன், டி. தனக்கோட்டி ஆகியோர் கல்வித் திட்டத்தின் குறைகளை எடுத்துக் காட்டி வன்மையாகக் கண்டித்துப் பேசினர்.

பின்னர், வாக்கெடுப்பு நடத்த ஒன்பது (9) பேர் ஆதரித்தும், முப்பத்திரெட்டு (38) பேர் எதிர்த்தும் வாக்களிக்க, சபாநாயகர், 'புதிய கல்வித் திட்டம் தோற்றது,' என்று கூறி பாராளு மன்றத்தை இனிது முடித்தார்.

உள்நாட்டு மந்திரி வெளியேற்றம்!

புதுடில்லி, மார்ச் 11—

ஆங்கிலோ-இந்தியத் தலைவர் பிராங்க் அந்தோணியின் சில வார்த்தைகளால் மனம் புண்பட்டு, உள்நாட்டு மந்திரி மக்கள் சபையில் பத்திரிகை சட்ட நீடிப்பு மசோதா விவாதத்தின் போது சில நிமிட நேரம் சபையை விட்டு வெளியேறினார்.

ஆந்திர சர்க்கார் ஊழியர்கள்

சொத்து வாங்கினால் அறிவிக்க வேண்டும்?

கர்னூல், மார்ச் 12—

ஆந்திர சர்க்கார் ஊழியர்கள் தாங்களோ தங்கள் வாழ்க்கைத் துணைவியரோ, தங்களை நம்பி வாழ்பவர்களோ ரூ 200 மதிப்புக்கு மேற்பட்ட தாவர சொத்துக்களை வாங்கினால், அவை எப்பொழுது வாங்கப்பட்டது என்பதை இலாகாத் தலைவர்களுக்கோ, சர்க்காருக்கோ அறிவிக்க வேண்டுமென்ற விதியிருப்பதாக சட்டசபையில் முதல் அமைச்சர் பிரகாசம் அறிவித்தார்.

"இதன்படி நடக்கத் தவறுபவர்களை வேலையிலிருந்து நீக்கப்படலாம்," என்று அவர் குறிப்பிட்டார்.

பஞ்சாபில் அவசர நிலைமை பிரகடனம்!

அகமதியா இனத் தலைவர் குத்துண்டார்

லாகூர், மார்ச் 12—

இங்கிருந்து 100 மைல் தூரத்திலுள்ள 'ரப்வா' என்ற ஊரில், அகமதியா இனத் தலைவர், மசூதியில் தொழுகையை முடித்துக் கொண்டு வெளியே வருகையில், ஓர் இளைஞனால் குத்துண்டார்.

இதன் விளைவாக எதிர்ப்புக் கலவரங்கள் ஏதும் நேரிடா திருக்க, முன்னெச்சரிக்கையாக அவசர நிலைமை பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது.

அந்தமான் அபிவிருத்தி

குடியரசுத் தலைவர் வாக்குறுதி

போர்ட்பிளேர், மார்ச் 11—

35 ஆயிரம் மக்கள் தொகையைக் கொண்டு, 'சி' பிரிவு மாநிலமாகத் திகழும் அந்தமான், நிகோபார் தீவில் வாழும் மக்களுக்கு அடுத்த சில ஆண்டுகளுக்குள் அபிவிருத்திகளைச் செய்து கொடுப்பதாக, டாக்டர் ராஜேந்திர பிரசாத் வாக்குறுதி அளித்தார்.

கோலார் தங்கச் சுரங்கத்தில் தலையிட மத்திய சர்க்கார் அனுமதி கிடைக்கவில்லை

மைசூர் சட்ட சபையில் முதலமைச்சர் அனுமந்தையா அறிவிப்பு

பெங்களூர், மார்ச் 11—

கோலார் தங்கச் சுரங்க விஷயமாக மைசூர் சர்க்கார் எடுத்துக்கொள்ள எண்ணியுள்ள ஏற்பாடுகளைச் செய்ய மத்திய சர்க்கார் அனுமதி இன்னமும் கிடைக்கவில்லை என மைசூர் சர்க்கார் முதலமைச்சர், மைசூர் சட்டசபையில் அறிவித்தார்.

மத்திய சர்க்காருக்கும் மாநில சர்க்காருக்கும் பொதுவான விஷயமாக தங்கச் சுரங்கம் இருந்தபோதிலும்கூட, இத்துறையில் மாநில சர்க்கார் எடுக்க நினைக்கும் நடவடிக்கைகளுக்கு முன்கூட்டியே மத்திய சர்க்காரின் ஒப்புதல் பெற வேண்டியது கட்டாயமாகிறது. நம்முடைய சர்க்கார் ஏற்பாடுகளுக்கு உடனடியாக ஒப்புதல் தர வேண்டுமென டெல்லி சர்க்காரை தினசரி வற்புறுத்திக் கொண்டேதான் இருக்கிறேன். ஆனால், இதுவரையில் நமது உத்தேச நடவடிக்கைகளுக்கு மத்திய சர்க்கார் சரி சொல்லாமலேயே இருந்து வருகிறது.

இதுபற்றி எழுந்த விவாதத்தின்போது ஒரு உறுப்பினர் 'சுரங்க முதலாளிகள் மிக மிகத் திறமை வாய்ந்தவர்கள். அவர்கள் நம்மைச் சுரண்டி வருகிறார்கள். அவர்களுடைய கணக்குகளை சர்க்கார் ஆராய்ந்து பார்க்க முனைய வேண்டும்," எனக் கூறினார்.

"தங்க வரி விதிப்பு சட்டத்தை ரத்து செய்தது தற்கொலைச் செய்துகொண்டது போலாகும். சட்டம் நீக்கப்பட்டதும் சுரங்கக் கம்பெனிகளிடமிருந்து சர்க்காருக்குக் கிடைத்துக்கொண்டிருந்த வருமானம் குறைந்து போய்விட்டது. இதற்கு முன் பெற்றுவந்த குறைந்தத் தொகைகூட இந்த ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் கிடைக்கவில்லை. வரி விதிப்புச் சட்டம் அமுலில் இருந்தபோது, வரியில்லாமல், ஆண்டு ஒன்றுக்கு 25 லட்சம் ரூபாய் உரிமைப் பங்காகவும் நாம பெற்று வந்தோம்.

"தங்க வரி விதிப்புச் சட்டத்தை மாற்றியவர்களை தண்டிப்பதற்கான அதிகாரம் இந்தச் சபைக்கு இருக்குமானால், அந்த சபை நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கு இதுவே தக்க சமயமாகும்."

1940-ல் தங்கத்திற்கு வரி விதிக்கப்பட்டது. 1949-ல் அது மாற்றப்பட்டது.

தங்க வரி சட்டம் அமுலில் இருந்த காலத்தில் மைசூர் சர்க்காருக்கு ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் வருமானமாகக் கிடைத்து வந்தது. சட்டம் ரத்தானதும் சுரங்கக் கம்பெனிகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 25 லட்சம் சர்க்காருக்குக் கிடைக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. 'இது செயலில் நடைபெறவே இல்லை. சுரங்கக் கம்பெனிகளிடமிருந்து சர்க்காருக்கு ஒரு சல்லியும் கிடைக்கவில்லை'" என அனுமந்தையா சட்ட சபையில் கூறினார்.

"சுரங்கக் கம்பெனிகள் செலவைப் பெருக்கிக் காட்டி, சர்க்கார் பங்கிட்டுக் கொள்வதற்கான இலாபமே இல்லாமல் செய்துவிட்டார்கள்"

என்றும், முதலமைச்சர் குறிப்பிட்டார்.

சர்வ கலாசாலைகளில் போதனா மொழி

புதுடில்லி, மார்ச். 9—

சர்வகலாசாலைகளில் போதனா மொழி பற்றி சர்வ கலாசாலை கல்விக் குழு தெரிவித்துள்ள யோசனையை மத்திய சர்க்கார் பூர்ணமாக அங்கீகரித்திருப்பதாக கல்வி மந்திரியின் பார்லிமெண்டரி காரியதரிசி தெரிவித்தார்.

நம் நாடு
திமுக தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 12—3—54 வெள்ளி

வீரமுமல்ல! விவேகமுமல்ல!

"திரு. இராமசாமி ரெட்டியார் பெற்றுள்ள சுய அனுபவம், இரண்டொரு கிராமத்தில் அவர் நேரில் சென்று கண்டதின் விளைவு. தற்கால நிலையில் பொதுக் கருத்தைத் திரட்டுவது என்பது கடினம். விவாதத்திற்குரிய இச்சூழ்நிலையில், நானோ, மற்றவர்களோ பொதுக் கருத்தைத் திரட்ட முயற்சிப்போமேயானால், அனைத்தும் சரியாகவே இருக்கிறது என்று நினைக்கும் வகையில், எல்லா இனத்திலும் முன்னேற்பாடு செய்யப்பட்டிருக்கும்."

"திட்டத்தின் தன்மை நீங்கலாக, அவருடைய எதிர்ப்பில் முக்கிய இடம் பெற்றுள்ளது, திட்டத்திற்குள்ள திராவிட கழகம் எதிர்ப்பைக் குறித்தே யாகும். எனவே, 'அவர்களுடன் விளையாடாதே' என்கிறார். 'அவர்கள் செலவாக்குப் பெறுகிறார்கள்; அவர்கள் எதிர்க்கிறார்கள்; அவர்களுக்கு ஒரு வாய்ப்பு அளிக்காதே; திட்டத்தைக் கைவிடுவது நல்லது' என்று அரசியல் அறிவுரை அளிக்கிறார்."

"நான் ஒரு பழைய போர் வீரன்; இதைக் கைவிடுவது தவறு. நீங்கள் எவ்வளவுக்கெவ்வளவு விட்டுக்கொடுக்கிறீர்களோ, அவ்வளவுக்கவ்வளவு எதிரிகளும் தாக்குவார்கள். பொது வாழ்க்கையில் மறைந்து நிற்கும் உண்மை இது. ஒன்றைத் தவறு என்று நாம் உணர்ந்தால், அதைக் கைவிட்டு விடலாம். திராவிடர் கழகம் எதிர்க்கிறது என்பதற்காக, ஒன்றைக் கைவிடுவது கூடாது. திராவிடர் கழகங்களின் தந்திரங்களை எதிர்த்துப் போராட உறுதி கொண்டிருந்தால், இறுதியாகவும் அதையே செய்ய வேண்டும். அவர்களுக்கு நீங்கள் விட்டுக் கொடுக்கக்கூடாது."

"மிருகங்கள், மனித இயல்பைப் பார்க்கலாம். எதிர்த்து நின்றால்தான் வெற்றி; புறமுதுகு காட்டினால் தோல்வியே! இதுதான் வாழ்க்கையின் உண்மை!'

மேலே எடுத்துக் காட்டியுள்ளது, முன்னாள் முதல்வர் ஓமந்தூர் காந்தி ராமசாமி, நேற்று முன்தினம், புதிய கல்வித் திட்டத்திற்கு எதிராக, மேல் சபையில் எடுத்துக் காட்டிய நிலைமை விளக்கத்திற்கு, அன்பர் ஆச்சாரியார் திருவாய் மலர்ந்தருளியுள்ள அறிவுரைகளாகும்—இல்லை—ஆணவச் சொற்களாகும். ஏதோ போர்க்களத்தில் நின்றுகொண்டு, தம்மை ஒரு நெப்போலியன், சீசர் போல் பாவித்துக் கொண்டு, பேசுவதாகத் தெரிகிறதேயல்லாது, குடி மக்கள் பிரதிநிதிகள் கூடியுள்ள சட்ட மன்றத்தின் முன்னின்று சர்க்கார் கட்சியை எடுத்துக் கூறுவதாகக் காணோம்! அவர் பேச்சில் வெறும் போலி வீரத்தின் துர்நாற்றம் அடிக்கின்றதேயல்லாது, உண்மையான வீரத்தின் தூய வாடை வீசுவதாகக் காணோம்!

ஏதோ ஒரு கொள்ளைக்கூட்டத்திற்குத் தலைமை ஏற்று, மற்றொரு கொள்ளைக் கூட்டத்தைத் தாக்கக் கிளம்பும் நேரத்தில், சோர்ந்து கிடக்கும் தம் கொள்ளைக் கயவர்களுக்கு, கொலை வீரத்தையூட்ட பேசப் புகும் உபதேசத்தைப் போலத்தான், சென்னை மாநில முதலமைச்சர் கனம் ஆச்சாரியாரின் வீரப் பிரதாப உரையும் இருக்கிறதே ஒழிய வேறு ஒன்றுமில்லை.

காலமோ இருபதாவது நூற்றாண்டு; ஆட்சி அமைப்போ மக்களாட்சி முறை என்று சித்தரிக்கப்படுவது; அடிப்படையோ விவாதித்து ஒப்புதல் பெற்று ஆட்சி நடத்தல் தத்துவத்தைக் கொண்டது; அதிலே தாம் ஒரு அங்கம் என்ற உண்மை உணர்ந்து கனம் ஆச்சாரியார் பேசாமல், தான் பதவி பெற்ற இயல்புக்கேற்பவே சல்லடம் கட்டுகிறார்!

மகேஸ்வரன் வாக்கான மக்களின் ஒப்புதலைப் பெற்று இப்போதுள்ள உயர்ந்த பதவியில் அவர் அமர்ந்திருந்தால், மகேஸ்வரன் குரலைக் கொஞ்சமாவது மதித்து நடக்க வேண்டுமே என்ற அக்கரையும், கவலையும் கனம் ஆச்சாரியாருக்கு இருக்கும். ஆனால், அவர்தான், புனிதமான இடத்திற்கு, அக்கிரமத் தாம்பூலம் பெற்று நுழைந்த ஆஷாடபூதியாக இருக்கிறாரே; அவரிடத்தில் எப்படி நாம் இடத்திறகேற்ற இயல்பை எதிர்பார்க்க முடியும்?

'ஓடுகிற நாய் ஓடினால் துரத்துகிற நாய்க்கு இளக்காரம்' என்ற எதற்கோ எழுந்த உவமையை எடுத்துக் காட்டி, தாம் எதிர்ப்புக்குப் பணிய—இல்லை—இணங்கமாட்டேன் என்று பொருந்தா வாதம் புரிகிறார் கனம் ஆச்சாரியார்.

ஆற்றங்கரை ஓரத்தில் வானோங்கி வளர்ந்திருந்த ஒரு தென்னையும், அதைச் சுற்றி பெரும் புதராக நாணல் செடியும் இருந்தன; பலமான காற்று அடித்தது. நாணல் பெரும் புதரிலிருந்த ஒவ்வொரு நாணலும் சாய்வதும், திரும்ப உயர்ந்து எழுவதாகவும் இருந்தது. ஆனால், தென்னையோ, ஒரேயடியாகச் சாய்ந்தது! மீண்டும் எழுந்து தலைநிமிர்ந்து நிற்கவில்லை! வேரோடு தரையில் நிரந்தரமாக விழுந்துவிட்டது!

இந்தக் கதையிலே நெப்போலியன் காலத்து வீரம் காணப்படாமல் இருக்கலாம். ஆனால், மக்களாட்சிக் காலமான இக்காலத்துக்குத் தேவையான விவேகம் வேண்டிய அளவு இருக்கத்தான் செய்கிறது! குக்கல் கதை கூறிய தலைகனத்த கனம் ஆச்சாரியாருக்கு இதை அர்ப்பணிக்கிறோம்! அவர் அறிவு பெறுவார், திருந்துவார் என்பதற்காகவல்ல; அவருடைய எதிர்கால அரசியல் வாழ்வு, வேரோடு சாய்ந்துபோன தென்னை மரத்தோடு ஒத்துக் கிடக்கிறது என்பதை, அவர் உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே!

ஆட்சி பீடத்திலே அமர்ந்துள்ளவர்கள் ஆணவத்தோடு அடக்குமுறைகளை அடுக்கடுக்காக வீச வீச, அடக்குமுறைகளுக்கு ஆளானவர்களின் கட்சியும், கொள்கையும் மேலும் உரம் பெறும், ஊர் மக்களின் ஆதரவும் பல்கிப் பெருகக் கூடும் என்ற அரசியல் அரிச்சுவடியை, தாம் அதிகம் கற்றுள்ளோம் என்று தருக்கிக் கிடக்கும் கனம் ஆச்சாரியாருக்கு அறிவுறுத்திக் கொள்கிறோம்.

அடக்குமுறைகளை ஏவிய ஆங்கில ஏகாதிபத்தியம், அழுவாரற்று செத்து மடிந்து போனதும், அந்த இடத்தில் புல் முளைத்துப் போனதும், நமது காலத்தில், நம் கண் முன்னால் நடந்தசரித்திரக்காட்சியாகும். நாம் மறந்தாலும், அதை, ஆச்சாரியார் மறந்துவிட நியாயமில்லை. ஏனெனில், அவரே, ஆங்கில ஏகாதிபத்தியம் வீசிய அடக்குமுறைக்கு ஆளானதால், நாடறிந்த முதல் வரிசை தலைவர் நிலைக்கு உயர்ந்துபோன அனுபவம் பெற்றிருக்கிறார் என்பதால்!

அடக்குமுறைகளை நம்பி வாழ்பவர் தேய்வதும், அவைகளைத் தாங்கிக் கொள்பவர் ஆக்கம் பெறுவதும், அவர் கண்டுள்ள உண்மை. அவருக்குக் கிடைத்துள்ள கீர்த்தியும் அதனால் விளைந்த ஒன்றேயாகும். நிற்க,

கனம் ஆச்சாரியார் ஒரு பழைய போர்வீரர்தானே! அதிலுமோ, அவர் மூப்படைந்த முதியவர்! போராசை பெருகி வழியும் பருவம்; போறிவு பிரிந்து செல்லும் கட்டம்! எல்லாத் துறையிலுமே, முன்னாள் பெற்ற பாடங்களை மறந்துவிட்டார்! ஐயோ பாவம்! அனைத்திலுமே மாஜியாகிவிட்டார்! கனம் ஆச்சாரியார் ஒரு பழைய போர்வீரர் தான்! அட்டி இல்லை!

திராவிடப் பெருங்குடி மக்களின் கல்விக் கண்ணைக் குருடாக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு, புதிய திட்டத்தைப் புகுத்தி இருக்கிற ஆரியக் குடிமகனிடம் இந்த ஆணவ உரையைத் தவிர, நாம் வேறு எதையும், எப்பொழுதும் எதிர்பார்த்தது கிடையாது! இனி எதிர்பார்க்கப் போவதும் கிடையாது!

ஆச்சாரியார் பேச்சு, அவர் கனமாக இருப்பதால் பேசப்பட்ட சந்தர்ப்பவாத பேச்சே ஒழிய, அதில் கடுகத்தனை வீரமும் இல்லை; எள்ளு மூக்கத்தனை அரசியல் விவேகமுமில்லை என்று கூறி முடிக்கிறோம்.

6 மாதங்களுக்குள் இந்தி கற்றுக்கொள்ள வேண்டுமாம்!

இல்லையேல் வேலை போய்விடும்!

லட்சுமணபுரி, மார்ச். 12—

உத்திர பிரதேச அதிகாரிகள், சிப்பந்திகளுக்கு சர்க்கார் விடுத்துள்ள எச்சரிக்கையில், இன்னும் 6 மாதங்களுக்குள் இந்தி கற்றுக்கொள்ள வேண்டும் என்றும், இல்லாவிடில் அவர்கள் வேலையை விட்டு நீக்கப்படலாம் என்றும் எச்சரித்துள்ளது.

பிரெஞ்சிந்திய பார்சல்கள்

—:o:—

சென்னையிலேயே தங்கிவிட்டன

சென்னை, மார்ச் 12—

பிரஞ்சிந்தியாவிலுள்ள முகவரிகளுக்கான 8,000 தபால் பார்சல்கள் சென்னை மாநிலத்திலேயே தங்கிக் கிடக்கின்றன.

இவைகளில் சுமார் 5,000 புதுச்சேரிக்கும், சுமார் 2,000 காரைக்காலுக்கும் சுமார் 1,000 ஏனாமிற்கும் அனுப்பப்படவேண்டியவை'

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு

புகலாரா, மார்ச் 10—

சௌராஷ்டிராவில் எல்லா கைத்தறி நெசவாளர்களும் ஐக்கியப்பட்டு அகில சௌராஷ்டிரா நெசவாளர் சங்கத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

சர்க்காரிடம் குறைகளைத் தெரிவிக்கவும், சர்க்காரின் திட்டங்களினால் பயன் பெறவுமே இச்சங்கத்தை அவர்கள் அமைத்திருக்கின்றனர்.

இராசபாளையம் ஜெயராம் மில் கதவடைப்பு?

—:o:—

நஷ்டஈடு கேட்டு மறியல் செய்த தொழிலாளர்கள் கைது!

இராசபாளையம், மார்ச் 11-

27—12—53 முதல் ஜெயராம் மில் கதவடைப்பை வாபஸ்வாங்க வேண்டுமென்று பல ஊர்வலங்கள் நடத்தியும் ஆலை நிர்வாகிகள் கேட்காததால், ஆலை முதலாளி இல்லத்தின்முன் தொழிலாளர்கள் சாத்வீக மறியல் செய்யத் தீர்மானித்து, தோழர் பரமசிவன் தலைமையில் (6—3—54ல்) மறியல் நடத்திய 26 தோழர்களைப் போலீசார் கைது செய்தார்கள்.

8—3—54ல் தோழர் என். கருப்பையா (தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்) தலைமையில் சென்ற 11 பேரைக் கைது செய்தார்கள்.

தோழியர்கள் கிருஷ்ணம்மாள் சோலையம்மாள் தலைமையில் சென்ற 11 நபர்களையும் கைது செய்தார்கள்.

9—3—54ல் மறியல் செய்த 20 பேர் கொண்ட குழுவைக் கைது செய்தனர். நஷ்டஈடு கொடுக்கும்வரையில் தொடர்ந்து மறியல் நடைபெறுமென்று தெரியவருகிறது. சிறைப்படுத்தப்பட்டவர்களில் பலர் கழக உறுப்பினர்களாவர்.

மொத்தம் இதுவரை கைது செய்யப்பட்ட தோழர்கள் 68 பேர்கள்.

இந்தி போதனை— திருப்தியளிக்கவில்லை!

புதுடில்லி, மார்ச். 9—

"இந்தியை பிரபலப்படுத்துவதில் சர்வகலாசாலைகள் அடைந்திருக்கும் முன்னேற்றம் சர்க்காருக்குத் திருப்தியளிக்கவில்லை,"—என்று கல்வி மந்திரியின் பார்லிமெண்டரி காரியதரிசி இந்திய மேல்சபையில் தெரிவித்தார்.

"சர்வ கலாசாலைகளின் சுதந்திரத்தில் சர்க்கார் தலையிட விரும்பவில்லை," யென்று அவர் மேலும் சொன்னார்.

மாஞ்செஸ்டர், மார்ச், 10—

ஆப்பிரிக்க மார்க்கெட்டுகளைக் கைப்பற்றுவதற்காக ஜப்பான், தன் துணி விலைகளைக் குறைத்துள்ளது.

பிளாஸ்டிக் கிராமபோன் ரிக்கார்டுகள்

இந்தியா தயாரிக்கும்

பம்பாய், மார்ச். 10—

இந்தியாவிலுள்ள தொழிற்சாலை யொன்று முதல் தடவையாக பிளாஸ்டிக்கில் கிராமபோன் ரிக்கார்டைத் தயாரித்துள்ளது.

இம்மாதிரி பிளாஸ்டிக் ரிக்கார்டுகள் இதுவரை அமெரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும்தான் தயாரிக்கப்பட்டுள்ளன.

பிளாஸ்டிக் பிளேட்டுகள் உடையவே உடையாதாம். இத்தொழிற்சாலை, ஓராண்டில் 15-லட்சம் தட்டுகளைத் தயார் செய்யும் எனத் தெரிகிறது.

காராச்சியில் புதிய போலீசு பயிற்சிப் பள்ளி

அயல் நாட்டு நிபுணர்கள் வருகின்றனர்!

காராச்சி, மார்ச். 10—

காராச்சியில் புது போலீஸ் பயிற்சிப் பள்ளி நவீன சாதனங்களுடன் ஏற்படுத்தப்பட இருக்கிறது. 350 ஏகரா பரப்புள்ள நிலம் ஒன்றும் வாங்கப்பட்டுள்ளது. ஆசியாவிலேயே ஒரு சிறந்த பயிற்சிக் கூடமாக இது விளங்கும்படி செய்யப்படுமாம். அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளிலிருந்து பயிற்சியளிக்க நிபுணர்கள் தருவிக்கப்படுவர்.

செயற்கை முறையில் மழை வருவிக்க முயற்சி

பல நாடுகள் சிரத்தை

பாங்காக், மார்ச். 12—

தாய்லாந்தில் காலநிலை அடிக்கடி மாறி மழை பெய்யாமல் போவதால் செயற்கை முறையில் மழை பெய்விக்கச் செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டம் வெற்றி பெற்றால் மத்திய தாய்லாந்தில் ஒரு கோடி ஏகரா நிலங்களுக்கு மழை கிடைக்கும்.

* * *

லண்டன், மார்ச் 10—

பிரிட்டிஷ் விவசாயிகள், கூட்டு முயற்சியாலோ அல்லது தங்கள் சர்க்கார் மூலமோ செயற்கை மழை பெய்விக்கும் நிபுணரை அமெரிக்காவிலிருந்து வரவழைக்க விருக்கின்றனர். அந்த நிபுணர், அமெரிக்காவில் 16-மாகாணங்களில் செயற்கை முறையில் மழை பெய்யச் செய்து வெற்றி பெற்றுள்ளார்.

தூத்துக்குடி வழக்கில் 15 தோழர்களுக்கு விடுதலை

மற்றவர் விசாரணை ஒத்திவைப்பு

திருநெல்வேலி, மார்ச். 11—

தூத்துக்குடி சதி வழக்கை விசாரித்து வரும் விசேஷ மாஜிஸ்திரேட் அரிகர அய்யர், வழக்கில் சம்மந்தப்படுத்தப் பட்டிருந்த 15 தோழர்களை நிரபராதிகள் எனக் கண்டு வழக்கிலிருந்து நீக்கிவிட்டார்.

அவர்கள்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்களை மெய்ப்பிக்கப் போதிய சாட்சியங்கள் இல்லாததே, அவர்கள் விடுவிக்கப்பட்டதற்கான காரணமாகும்.

மற்ற தோழர்கள் மீதுள்ள சதிவழக்கு மேற்கொண்டு 19-ந் தேதிக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

விடுதலை செய்யப்பட்ட தோழர்கள்:— பிச்சுமணி, தங்கசாமி, பாலைமுத்து, ராஜ நாடார், ராமலிங்க நாடார், சுப்பிரமணிய நாடார், செல்லைய நாடார், ஞானயுத நாடார், குருஸ், மாணிக்கம், தங்கவேல் நாடார், ஆதிநாராயண நாடார், பொன்னுசாமி நாடார், அருணசல நாடார், வேலு நாடார்.

புதுவையில் - அடக்குமுறை?

—o—

மக்கள் தாக்கப்படுவது குறித்து கவலை

புதுடில்லி, மார்ச் 10-

இந்தியாவுடன் ஒன்றுபட கோரி புதுச்சேரியில் அமைதியாக ஊர்வலம் நடத்திய துணி மில் ஊழியர்களை பிரெஞ்சிந்திய அதிகாரிகள்கொடுமையாக நடத்தியதைப்பற்றி மத்திய சர்க்கார் டில்லியிலுள்ள பிரெஞ்சு ஸ்தானிகரிடம் ஆட்சேபக் குறிப்பொன்றைத் தாக்கல் செய்திருக்கின்றனர்.

மார்ச் 2, 3-ந் தேதிகளில் அச்சம்பவம் நடந்ததாகவும், ஒரு மில்லைச் சேர்ந்த சுமார் 70 ஊழியர்கள், பிரெஞ்சு ஆட்சியை எதிர்த்தும், இந்தியாவுடன் ஒன்றுபடக் கோரியும் கோஷிகள் எழுப்பிக் கொண்டு அமைதியாக ஊர்வலங்களாக வர அவர்கள் அடிக்கப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டதாகவும் தகவல் கிடைத்திருக்கிறது.

"இதுபோன்ற சம்பவங்கள் புதுச்சேரியை அடுத்துள்ள இந்தியப் பகுதிகளில் பெரிய விளைவுகளை ஏற்படுத்தும் அளவில் எதிரொலிக்கும்; ஆகையால், அது பற்றிய கவலை தெரிவிக்காமலிருக்க முடியாது," என்று இந்திய சர்க்கார் அந்த ஆட்சேபனையில் தெரிவித்திருப்பதாக அறியப்படுகிறது.

• • •

ரோடியர் மில்லில் ஆட்கள் குறைப்பு?

புதுச்சேரி, மார்ச் 10-

இங்குள்ள ரோடியர் மில்லில், 1,856 தொழிலாளர்களையும், 24 குமாஸ்தாக்களையும் ஆட்கள் குறைப்பின் கீழ் நீக்கிவிட செய்திருக்கும் முடிவிற்கு பிரெஞ்சிந்திய சர்க்கார் அங்கீகாரம் அளித்துவிட்டதாம்.

94 மில்கள் மூடப்படும்!

அமிருதசரஸ், மார்ச். 10—

இங்குள்ள ஏறக்குறைய எல்லா 94 விசைத் தறி மில்களும் கதவடைப்பு அறிவிப்பை வெளியிட்டிருப்பதாகத் தெரிகிறது.

செயற்கைப் பட்டுத் துணிகள் மீது விதித்துள்ள சுவால் வரி, உபரி வரிகளை அம்மில்கள் எதிர்க்கின்றனவாம்.

லண்டன், மார்ச். 10—

ஆண்கள் பெண்களாக, பெண்கள் ஆண்களாக மாறுவது ஆகிய அதிசயங்களைக் கவனித்த சினிமாத் தயாரிப்பாளர்கள் இவையே அடிப்படையாகக் கொண்டு ஒரு படத்தை எடுத்திருக்கிறார்கள்.

போலி புத்தக வியாபாரிகள் மீது..

—o—

கருணாநிதி நடவடிக்கை

மதுரை, மார்ச் 10—

"மனோகரா" திரைக் கதை-வசன புத்தகத்தை வெளியிடுவதாக விளம்பரம் செய்திருந்த மதுரை செல்வம் பதிப்பகம், ரதி பதிப்பகம் ஆகியவைகளின் மீது நடவடிக்கை எடுப்பது சம்மந்தமாக தோழர் மு. கருணாநிதி மதுரை சென்று மேற்படி பதிப்பக உரிமையாளர்களைச் சந்தித்து, இரு பதிப்பகத்தினரும் தங்கள் செயலுக்கு வருந்தியும், விளம்பரம் செய்தது தவறு என ஒப்புக்கொண்டும், இருவரும் பத்திரிகைகளில் அறிக்கை கொடுத்த பிறகு, அவர்களை ஒழுங்காக நடந்து கொள்ளுமாறு அறிவுரை கூறிவிட்டு, "மனோகரா" புத்தகத்தை தவறான முறையில் அச்சடித்த அச்சகத்தினர் மீது மான நஷ்ட வழக்கு தொடர வக்கீல் மூலம் முடிவு செய்து விட்டுத் திரும்பினார்.

பரூக் மன்னரின் சொத்துக்கள் ஏலம்

இதுவரை உலகிலேயே நடைபெறாத அதிசயம்!

கெய்ரோ, மார்ச். 8—

எகிப்தின் நாடு கடத்தப்பட்ட பரூக் மன்னர் சேகரித்து வைத்த பல நாடுகளுடைய பழங்கால நாணயங்களின் ஏலம் முடிவடைந்து விட்டன.

அவருடைய நாணயங்கள் மொத்தம் இரண்டரை லட்சம் எண்ணிக்கைகளைக் கொண்டது அவைகள் மொத்தம் 2,14,700 எகிப்திய பவுன்களுக்கு ஏலம் போனதாகத் தெரிகிறது.

இதுவரை உலகில் எந்த நாட்டிலும் இவ்வளவு தொகை கொண்ட ஏலம் நடந்ததில்லை என்று ஏலக் கம்பெனி அதிகாரியே அதிசயிக்கிறார்.

தென்னிந்தியாவில் இரும்புத் தொழிற்சாலை

கடலூர், மார்ச். 8—

கைத்தொழில் வளர்ச்சி அடையவேண்டியதின் காரணமாக இரும்புத் தொழிற்சாலை ஒன்று தென்னிந்தியாவில் ஆரம்பிக்கப்படும் என்று இந்திய வர்த்தக மந்திரி செய்வேலியில் தெரிவித்தார்.

தெஹ்ரான், மார்ச் 9—

அமெரிக்க சர்க்கார் ஈரான் சர்க்காருக்கு மேலும் 3 கோடி ரூபாய் பண உதவி அளித்திருக்கிறார்கள் ஏற்கனவே முசாதிக் கவிழ்க்கப்பட்டவுடன், 2 கோடி ரூபாய் கடன் தரப்பட்டது.

கழகக் கூட்டங்கள்

★

பெங்களூர்

14—3—54 மாலை 5½ மணிக்கு

இடம்: சிக்க-லால் பாக்கில்

தலைவர்: எம். கிருட்டிணன்

பேசுவோர்:

சி. என். அண்ணாதுரை

மா. மன்னர்

குறிப்பு:—14—3—54 காலை 9 மணிக்கு, சிராமபுரத்தில், பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்களால் தி. மு. கழக துவக்க விழா நடைபெறும்.

✶

மதுரை

14—3—54 மாலை 6 மணிக்கு

இடம்: தமுக்கம் திடல்

பேசுவோர்:

எஸ். முத்து

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

என். எஸ். இளங்கோ

✶

சாயாபுரம்

தலைவர்: பெருமாள்

பேசுபவர்:

எம். ரத்தினம்

தஞ்சையில் இரு மாநாடுகள்

தஞ்சை மாவட்ட இரண்டாவது திராவிட முன்னேற்றக் கழக சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள், முத்தமிழ் வள்ளல் ஏ. ஒய் ஏ. நாடார் அவர்கள் தோட்டத்தில், ஏப்ரல் 10, 11-ந் தேதிகளில் தஞ்சையில் நடைபெறும்.

சிறப்புச் சொற்பொழிவு

14-3-54 காலை 9 மணிக்கு, மதுரை, விக்டோரியா எட்வர்டு ஹாலில் (ரீகல் டாக்கிசில்) தோழர் கு. ஆறுமுகம், பி. ஏ., பி. எல், தலைமையில் நடைபெறும். தோழர்கள் க. அன்பழகன், வி. சௌந்திரராசன் ஆகியோர் 'மறுமலர்ச்சி' என்னும் பொருள் பற்றி பேசுவர். கூட்ட ஆரம்பத்தில் பி.எஸ். செல்வா அவர்களின் இன்னிசை விருந்து சௌந்திரராசன் குழுவினர் பின்னணியுடன் நடைபெறும், கட்டணம்: அணா 8, 4.

அமைப்பாளர்: எஸ். முத்து.

துவக்க விழா

14—3—54 மாலை 6 மணிக்கு செம்மாண்டம்பாளையம் திராவிடர் கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கத் துவக்க விழா, தோழர் சின்னதுரை தலைமையில் நடைபெறும். தோழர்கள் பி. வீரமணி, வி. குமாரசாமி தென்டபாணி, வி. கே. கலைமணி ஆகியோர், கைத்தறியாளர் நிலை பற்றி பேசுவர்.

மாவட்ட போர்டு பள்ளிகள் எண்ணிக்கை

சென்னை, மார்ச். 10—

சென்னை மாநிலத்தில் 18 மாவட்ட போர்டுகளின் நிர்வாகத்தில் 270 உயர்நிலை பள்ளிகளும், 8,571 ஆரம்பப் பள்ளிகளும் நடத்தப்பட்டு வருகின்றன என்று இன்று சென்னை மேல்சபையில் நிதி மந்திரி தெரிவித்தார்.

உயர்நிலைப் பள்ளிகளுக்கு ரூ 64,82,000-மும், ஆரம்பப் பள்ளிகளுக்கு 20,19,000-மும் செலவாகிறது; இது 1952—53-ம் ஆண்டு கணக்கு விவரங்கள்," என்றும் அவர் கூறினார்.

வெங்கிடராம ஐயர் வழக்கு விசாரணை: தற்காலிக தடை

—(:)—

சுப்ரீம் கோர்ட்டில் பிரதிவாதியின் மனு

புதுடில்லி, மார்ச். 11—

யூனியன் சர்க்கார் தொழில் வர்த்தக இலாக்காவின் காரியதரிசியாக இருந்து, லஞ்சஊழல் குற்றத்திற்காக அலுவல் துறை விசாரணை செய்யப்பட்டு, குடியரசு தலைவரால் வேலையில் இருந்து நீக்கப்பட்ட, ஐ. சி. எஸ். அதிகாரியான எஸ். ஏ. வெங்கிடராம அய்யர் மீது, மத்திய சர்க்கார் விசேஷ போலீஸ்துறை டில்லி விசேஷ ஸ்பெஷல் செஷன்ஸ் நீதிபதி முன்னிலையில் வழக்குத் தொடுத்தது. வழக்கை ஏற்றுக் கொண்டு பிரதிவாதிக்கு சம்மனும் கொடுக்கப்பட்டிருந்தது.

அய்யர் சார்பில், கோர்ட் நடவடிக்கை உடனடியாக நிறுத்தி வைக்க தடை விதிக்க வேண்டுமென்று சுப்ரீம் கோர்ட்டில் இந்திய அரசியல் சட்ட விதியின்படி மனு கொடுக்கப்பட்டது. மனுவை ஏற்றுக்கொண்டு, வழக்கை தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு சுப்ரீம் கோர்ட் தடை விதித்திருக்கிறது.

சென்னை நகரசபை வரவு-செலவுத் திட்டம்

தொழில் வரி உயர்வு ஒத்திவைப்பு

வரி, நிதி நிரந்தரக் கமிட்டி தலைவர் வேண்டுகோள்

சென்னை, மார்ச். 9—

சென்னை நகர சபை கமிட்டியின் 1954—55ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை வரி, நிதி, நிரந்தரக் கமிட்டித் தலைவர் எம். இராதாகிருஷ்ண பிள்ளை சமர்ப்பிக்கையில், ரூ. 5,46,000 துண்டு விழுவதாகத் தெரிவித்தார்.

கமிஷனர் தயாரித்த வரவு—செலவு திட்டத்திற்கும், கமிட்டி

வரவு - செலவுத் திட்டம்		
வருமானம்	ரூ.	2,32,54,000
செலவு	ரூ.	2,38,00,000
துண்டு	ரூ.	5,46,000

தயாரித்த வரவு — செலவு திட்டத்திற்குமுள்ள வேறுபாடுகளை விளக்குகையில், 1953—54ல், ரூ. 3 லட்சமும், 1954—55ல் 7 லட்சமும் துண்டு விழுவதை கமிட்டி குறைத்தது என்று கூறினார்.

பற்றாக்குறையை சரிகட்ட கமிஷனர் 3 வரி பிரரேபணை யோசனைகளை கூறினாரென்று அவர் எடுத்துக்காட்டினார். அவை வருமாறு:—

(1) எல்லா சொத்துக்களின் மீதும் ஒரே சீராக 20 சதவிகிதம் வரி விதிக்கலாம் — இதன் மூலம் ரூ. 5 லட்சம் கிடைக்கக் கூடும்.

(2) உயர்ந்த பட்ச விகிதத்திற்குத் தொழில் வரி விகிதங்களை உயர்த்துவது—இதன் மூலம் ரூ. 4 லட்சம் கிடைக்கும்

(3) குடி தண்ணீர் குழாய்களுக்குத் தீர்வை விதிப்பது—இதன் மூலம் 5 லட்சம் கிடைக்கும்.

கமிஷனரின் முதல் யோசனையை கமிட்டி அங்கீகரிக்கவில்லை.

வீட்டுவரி, சொத்துவரி சிறிது உயர்ந்தாலும் குடியிருப்பவர்களின் வாடகை உயரும்.

குழாய்களுக்கு வரி விதிப்பதென்கிற யோசனையை இயந்திர வடிகட்டு வசதிகள் ஏற்படும் வரையிலும், தென் சென்னைக்கு இரண்டாவது குழாய் பூர்த்தி படைகிறவரையிலும் ஒத்திவைக்கலாமென்று கமிட்டி கருதுகிறது.

"மோட்டார் வரி வருமானத்தில் கணிசமான உதவியும், பங்கும் கோரி அனுப்பியுள்ள மனுவின் மீது சர்க்கார் முடிவு செய்த பின், தொழில் வரி விகிதங்களை உயர்த்துவதென்கிற இரண்டாவது யோசனை தக்க காலத்தில் எடுத்துக் கொள்ளப்படும்," என்றார்.

மேலும் அவர் சொன்னார்:—

"சுகாதாரமான நகரத்தை நிர்வகிப்பதற்கு வேறு வழியின்றி வரி விதித்தேயாக வேண்டுமென்கிற அவசியம் ஏற்பட்டாலன்றி அநாவசியமான வரிச் சுமையைத் தவிர்ப்போம்."

"மோட்டார் வரி வருமானத்தில் பங்கும், இதர மானியக் கோரிக்கைகளையும் ஈடேற்றும்படி சர்க்காரிடம் நாங்கள் செய்துள்ள விண்ணப்பத்தை ஆதரித்து போதுமான அளவுக்குப் பொது மக்கள் அபிப்பிராயத்தை உருவாக்குவது மக்கள் கடமையாகும்," என்று அவர் வேண்டுகோள் விடுத்தார்.

★

தொழிலாளர் விடுதிகள் வாடகை

ஒரு ரூபாய் உயர்த்த முடிவு

சென்னை, மார்ச். 10—

சென்ரான்ஸ்மித் நகர், போடிபாளையம், கல்யாண மேல்நிலை சோலை முதலிய இடங்களிலுள்ள நகரசபை தொழிலாளர் விடுதிகளின் வாடகையை இப்போதுள்ளதை விட ஒரு ரூபாய் அதிகரிப்பது என்று நகர சபை தீர்மானித்தது.

இந்தப் பிரச்னைதான் கமிஷனர், வரி, நிதி நிரந்தரக் கமிட்டிக்கிடையே அபிப்பிராயப் பேதத்திற்கு இடமளித்தது.

1954—55-ம் ஆண்டிற்கு சொத்து வரியை, எல்லா நகர சொத்துக்கள் சம்பந்தமாகவும் உயர்ந்த பட்ச விகிதமான 20-சத விகிதத்திற்கு உயர்த்த வேண்டுமென்ற கமிஷனர் யோசனையை சபை நிராகரித்தது.

ஜெர்மன் ரசாயன நிபுணர்கள்

பாகிஸ்தானுக்கு வருகிறார்கள்

கராச்சி, மார்ச் 9—

ஜெர்மன் ரசாயனக் கம்பெனி ஒன்றின் நிபுணர்கள் பாகிஸ்தானில் ரசாயனத் தொழிற்சாலை ஏற்படுத்துவது சம்பந்தமாக நிலைமையை அறிய வருகிறார்கள். தங்கள் ஆராய்வுக் குறிப்புகளை இவர்கள் சமர்ப்பித்த பின், ஜெர்மன் கம்பெனியும், பாக். சர்க்காரும் தொழிற்சாலையைக் கூட்டாக ஏற்படுத்த திட்டம் வகுப்பர்.

திரு.-கொச்சி மந்திரிசபை

—:•:—

கம்யூனிஸ்டுகள் நிலைமை!

புதுடில்லி, மார்ச் 10—

"எல்லா ஜனநாயகக் கட்சி"களைக் கொண்ட ஒரு கூட்டுச் சர்க்கார் ஏற்படுத்துவதுதான் திரு.-கொச்சியின் இப்போதைய தேவை என்றும், அத்தகைய ஒரு சர்க்காரில் கம்யூனிஸ்டு கட்சிக்கு உரித்தான இடம் இருக்க வேண்டும் என்றும் ஒரு அறிக்கையில் இந்திய கம்யூனிஸ்டு கட்சி குறிப்பிட்டிருக்கிறது.

பொதுச்செயலாளர் பேச்சு...

—:o:—

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கொள, கனவானைப் பணம் கேட்டால், முதல் மகன் திருமணத்திற்கு 200 ரூபாயும் தந்து, தானும் திருமணத்திற்குச் சென்று டிரைவரை கவுரவப்படுத்துவார்; இரண்டாம் மகனின் திருமணத்திற்கு, 200 ரூபாய் 20 ரூபாயாகக் குறையும்; மூன்றாவது மகன் மணத்திற்கு ஊரிலேயே இல்லாமற் போய் விடுவார்—கனவானின் கார் டிரைவர், கனவானையே எத்தனை நாட்களுக்கு நம்பியிருக்க முடியும்? அல்லது, அப்படி அவரையே நம்பியிருப்பது தமிழனின் பண்பிற்குத்தான் ஏற்றதாகுமா?"

"நான் பயப்படக்கூடிய வகையில், ஆளும் கட்சியைச் சேர்ந்த நண்பர் செங்கல்வராயன், 'கைத்தறியாளர்கள் வேறு தொழிலும் கற்றுக்கொள்ள வேண்டும்,' என்றார். அது மிகவும் ஆபத்தானது; பிச்சை கேட்டு வருபவனுக்கு ஏதும் தராமலிருப்பதால் 'அங்கே சாவடி இருக்கிறது, போய்ச் சாப்பிடு' என்று நம் கையாலாகாத்தனத்தைக் காட்டுவது போன்றதுதான்—கைத்தறியாளரை வேறு தொழில் கற்றுக்கொள்ளச் சொல்வது; அல்லது நான் நெசவாளர் சார்பில் கேட்கிறேன்—'அப்படியே நெசவாளர் வேறு தொழில் கற்றுக்கொண்டாலும், தொழில் கிடைக்கும் என்ற உத்தரவாதம் எங்கே இருக்கிறது?'"

"நெசவாளர் உழவு வேலை செய்ய முடியுமா என்றால், முடியாது; அவர்கள் அம்மாதிரி உழவுத் தொழில் கற்றுக் கொள்வதாலும் நல்ல நெசவாளருமாகார்—நல்ல உழவருமாகார். டிராம்வே தொழிலாளர்கள் வேலையிழந்தபோது கூடிக் கூடிப் பேசினோம்—அவர்களுக்கு வேலை தர முடிந்ததா? அவர்களுக்கு வேறு என்ன வேலை செய்ய முடியும்—டிராம் ஓட்டுவதைத் தவிர? எனவே, மானுக்கு ஆபத்து வேங்கையால் என்றால், மானுக்குப் பாதுகாப்புத் தரத்தான் வேண்டும். ஆறு, கரை புரண்டோடாமலிருக்க அணை தேவைதானே?"

"நெசவாளர் பிரச்னையில் ஆச்சாரியாருக்கு, அக்கறை இருக்கிறது—ஆற்றலும், அறிவும் இருக்கின்றன; என்றாலும், அதிகாரம் இல்லை. அந்த அதிகாரத்தைப் பெறத்தான் நாங்கள் முயற்சிக்கிறோம். அந்த அதிகாரத்தைப் பெற்று கைத்தறியாளரைக் காப்பாற்றும் நாள் வரத்தான் போகிறது! தறிக் குழியில் நல்ல தமிழ் இலக்கியம் வளரும் அந்த நாள் வரத்தான் போகிறது! யவனத்திற்கும், சீனத்திற்கும் நமது ஆடைகள் சென்று, நம் தொழில் மேன்மையைக் காட்டும் நாள் மீண்டும் வரத்தான் போகிறது!"

தொடர்ந்து தோழர் அண்ணாதுரை அவர்கள் பேசியதாவது:—

"கைத்தறி நெசவாளர் பிரச்னைக்கு ஒரு நல்ல முடிவு காணும் வகையில் சென்னை நடைபெறும் இந்த 'கைத்தறி வார' விழாவில் என்னையும் கலந்து கொள்ளச் செய்த இந்த விழாக் குழுவினருக்கு என் நன்றி.

தலைமை தாங்கும் நண்பர் செங்கல்வராயன் அவர்கள் எனக்கும் அவருக்கும் உள்ள தொடர்பு பற்றியும், பொதுப் பிரச்னைகளில், எல்லாக் கட்சியினரும் சேர்ந்து பணிபுரிய வேண்டியதின் அவசியம் குறித்தும் விளக்கினார்கள்.

"எந்த நேரத்தில் எல்லாக் கட்சியினரும் ஒன்றாகச் சேர்கின்றனர்? எந்த ஒரு பிரச்னைக்கு தனியாக யாரும் முடிவு காண முடியவில்லையோ, எந்தப் பிரச்னை பலருக்கு புரியாத புதிராக இருக்கிறதோ, எந்தப் பிரச்னை பலரின் கூட்டுச் சேர்க்கையால் தான் தீர்க்கப்பட முடியுமென்ற நிலை இருக்கிறதோ, அந்தப் பிரச்னையில்தான் எல்லாக் கட்சியினரும் ஒன்றுபடுகின்றனர்.

"நெசவாளர் பிரச்னை தனிப்பட்ட எந்த ஒரு கட்சியினருடையதும் அல்ல. சமுதாய அரசியல் கொள்கைகள் வேறுபட்டிருந்தாலும், லட்சக்கணக்கான மக்களின் எதிர்கால வாழ்வு பற்றிய ஒரு பிரச்னையில் எல்லோரும் ஒன்று சேர்ந்துதான் ஆகவேண்டும்.

"கைத்தறி நெசவாளர் நிலை, சென்ற சில ஆண்டுகளாய் நாம் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு அவலமாயிருக்கிறது. தான் செய்திருந்த நல்ல தொழில் நசித்துப் போய் நெசவுத் திருந்தவன் தென்னாற்காட்டிலும், காஞ்சியிலிருந்தவன் மதுரையிலும், இப்படி அவரவர் ஊரையும், வீடு வாசலையும் விட்டு பிச்சைக்காரர்களாய்ச் சுற்றி அலைவதைக் கண்டோம்; இந்தப் பிரச்னையை நாம் தீர்க்கவில்லை, இன்னும்!

"நண்பர் செங்கல்வராயன் அவர்கள் இரண்டு உலக யுத்தங்களைக் குறித்து அலைக்கு அழைத்து, 'இது ஒரு நீண்ட காலப் பிரச்னை' என்று சொன்னார்; உண்மைதான்—கைத்தறி நெசவாளர் பிரச்னை ஒரு நீண்ட காலப் பிரச்னைதான். சிறிது காலத்துக்கு நெசவாளர்க்கு நூல் இல்லை என்ற குறை இருக்கும்; பின், கிடைக்கும் கூலி போதுமானதாயில்லை என்ற கிளர்ச்சி இருக்கும்; இன்னும் சில நாளில் செய்த துணிகள் விற்பனையாகவில்லை, அதனால் நெசவாளர்க்கு வேலை இல்லை—என்று, இப்படியாக நீண்டு, தொடர்ந்து வளர்ந்து வரும் பிரச்னையாகும், இந்தக் கைத்தறியாளர் பிரச்னை!

"இப்படிப்பட்ட ஒரு பிரச்னையைத் தீர்க்க ஆட்சி பீடத்திலிருப்பவர்கள், எல்லாக் கட்சியினர் ஆகிய எல்லோராலும் முடியவில்லை என்றால், அந்தப் பிரச்னையின் அடிப்படையை அலசிப் பார்க்கத் துணிவு வேண்டும்.

"எல்லாக் கட்சியினரும் ஒளிவு மறைவின்றி முதலில், இந்த நெசவுத் தொழில் வாழ வேண்டுமா, கூடாதா என்பதைத் தெளிவாக, திட்டவட்டமாகச் சொல்லிவிட வேண்டும்.

"என்னைப் பொறுத்த வரையில், கைத்தறித் தொழில், எவ்வளவு தான் ஆலையின் போட்டியிருந்தாலும், அதை சமாளித்து நிலைத்து நிற்கும் ஆற்றல் உடையது, என்ற கருத்துடையவன் நான். கைத்தறித் துணிகள், எந்த வகையிலும் ஆலைத் துணிகட்குக் குறைந்தவை இல்லை. இதற்குள்ள கைத்தறித் துணிக் கண்காட்சியை நானும் நண்பர் செங்கல்வராயனும் சுற்றிப் பார்த்தோம்; அங்குள்ளவையெல்லாம் நமது நெசவாளரின் திறமையினால், தொழில் நுணுக்கத்தினால் ஆனவை என்றறியும்போது எவ்வளவு ஆச்சரியப்பட்டேன் தெரியுமா?

கழகக் கூட்டங்கள்

அணியூர்

13—3—54 மாலை 7 மணிக்கு

இடம்: புதூர் மடத் திடல்

தலைவர்: மே. சி. சிதம்பரனார்

பேசுபவர்:

சி. பி. சிற்றரசு

★

நெகமம்

13—3—54 மாலை 7 மணிக்கு

இடம்: நாகர் மைதானம்

தலைவர்: பி. என். ராமானுசம்

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்

என். அப்பாவு

★

கோவை

13—3—54 மாலை 6 மணிக்கு

இடம்: சிதம்பரம் பூங்கா

பேசுபவர்:

மு. கருணாநிதி

அகில இந்திய கைத்தறி வார விழா

13—3—54 மாலை 5 மணிக்கு குடியாத்தம், ஆற்றில், தோழர் எம். கே. திருவேங்கிடம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் அண்ணாதுரை, ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ. ஆகியோர் பேசுவர்.

பட்டேன் தெரியுமா?

"ஆலைத் துணிகளின் அழகு, உழைக்கும் திறம் இவைகளைக் காட்டிலும் பன்மடங்கு கைத்தறித் துணிகள் சிறந்தவை.

"தாய் வாங்கினால், மகளும் வைத்திருந்து உடுத்திக்கொள்ளும் உரம்பெற்ற சேலைகள் வேண்டுமா—வாருங்கள் காஞ்சிபுரத்திற்கு! அழகிய கரை போட்ட வேட்டிகள் வேண்டுமா—வாருங்கள் சேலத்திற்கு!—பலப்பல வண்ணங்களிலே, கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில், கைத்தறித் துணிகள் செய்யப்பட்டிருப்பதைக் காணலாம்.

"விஞ்ஞானம் எவ்வளவுதான் விரிட்டுப் பாய்ந்தாலும், கைத்தறித் தொழில் காப்பாற்றப்பட முடிந்த ஒன்றே என்பது என் நம்பிக்கை.

"சுவிட்சர்லாந்திலே கைக் கெடியாரங்கள் குடிசைகளிலே தான் தயாரிக்கப்படுகின்றன. கைக்கடிகாரத்திற்குத் தேவையான, சிறிய சிறிய பாகங்களெல்லாம், குடிசைகளிலேயே தயாரிக்கப்பட்டு, பிறகு, அம்மாதிரி தயாரிக்கப்பட்ட சாமான்களை ஒன்று சேர்த்து, கடிகாரமாக உருவாக்கும் வேலை மட்டும் தான் பெரிய தொழிற்சாலைகளுக்குத் தரப்படுகின்றன.

"அதைப்போலத்தான், 'ஆலைகள், பருத்தியை நூலாக மட்டும் ஆக்கும்; நூலை, நெசவாளிதான் ஆடையாக நெய்வான்,' என்றிருக்க வேண்டும்.

"நான் சற்று வலியுறுத்திச் சொல்வதையெல்லாம் நீங்கள் எண்ணிப் பாருங்கள்.—

"இந்தியாவின் எந்தப் பகுதியிலே ஆலைகள் அதிகம்? எங்கே குறைவு? ஆலை அதிகமாக உள்ள பகுதியில்தானே கைத்தறித் தொழிலுக்குப் போட்டி இருக்க வேண்டும்? கோவையிலே, மேட்டூரிலே நெய்யப்படும் ஆலை வேட்டி, புடவைகளால், சென்னை மாநிலக் கைத்தறி வேட்டி, புடவைகளுடன் போட்டி ஏற்படுதே? எனவே இங்கு ஏற்படுகிறது போட்டி; அதற்கு வேலி போட்டாலல்லவா கை நெசவுத் தொழில் காப்பாற்றப்பட முடியும்?"

நெசவாளருக்கு....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கூட்ட முடிவில் தோழர் சொக்கலிங்கம் கம்புவின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

தோழர் டி. செங்கல்வராயன் மேலும் குறிப்பிட்டதாவது:—

"நெசவாளர் பிரச்னை இன்று ஒரு பொதுப் பிரச்னை. எந்த ஒரு குறிப்பிட்ட ஜாதி, மதப் பாகுபாடுகளுக்கோ, கட்சி வேறுபாடுகளுக்கோ இந்தப் பிரச்னையில் இடமில்லை. இதை முதலில் நீங்கள் எல்லாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். பல்வேறு அரசியல் கருத்து வேறுபாடு இருப்பினும் இந்த நெசவாளர் பிரச்னையில் ஒன்று சேர்ந்து பிரச்னைக்கு பரிகாரம் தேட வேண்டியது மிக அவசியம்.

"இந்தப் பிரச்னையைத் தீர்க்க பலர், பல்வேறு வழிகளைச் சொல்லியுள்ளார்கள்; ஆனால், இந்தப் பிரச்னை சரித்திர பூர்வமாக எப்படி வளர்ந்து வந்திருக்கிறதென தெரிய வேண்டுவது அவசியம்.

"18-ம் நூற்றாண்டுக்கு முன், கைத்தறித் தொழில், தீர்க்கப்பட வேண்டிய ஒரு பிரச்னையாயிருக்கவில்லை; ஓங்கி வளர்ந்திருந்த ஒரு பெரும் குடிசைத் தொழிலாயிருந்தது.

"பதினெட்டாம் நூற்றாண்டுக்குப் பின் விஞ்ஞான வளர்ச்சியும், இயந்திர வளர்ச்சியும் அதிகரிக்கலாயின; நெசவாளர் கஷ்டம் அனுபவிக்க ஆரம்பித்தனர்.

"முதலாம் உலக மகா யுத்தம் தோன்றியது; இயந்திர சாலைகளும், இன்ன பிற விஞ்ஞான சாதனங்களும் யுத்த தளவாடங்கள் தயாரிப்பதில் ஈடுபட்டமையால் கைத்தறித் தொழில், போட்டியினின்றும் தவிர்க்கப்பட்டு, பிரச்னை ஓரளவு தீர்க்கப்பட்டது; ஆனால், யுத்த முடிவில் மீண்டும் பெரியதொரு பிரச்னையாக வளர ஆரம்பித்தது. பின் சொல்லதற்கோ அல்லது நிலைமைக்கோ, இரண்டாம் உலக யுத்தம் தொடங்கியது. பிரச்னை தீர்ந்து விட்டது என்றெண்ணும்படி அளவு, கைத்தறியாளர் கஷ்டங்கள் குறைந்தன; ஆனால் யுத்த முடிவில் மீண்டும் இந்தப் பிரச்னை முன்போலவே உருக்கொண்டது.

"1933ல் சர்க்கார் இந்தப் பிரச்னை குறித்து விசாரணை செய்ய ஒரு கமிட்டியை ஏற்படுத்தினர். அந்தக் கமிட்டியும் கைத்தறித் தொழில் வாழத்தான் வேண்டுமென தீர்ப்பளித்தது. அரசாங்கமும் கைத்தறித் தொழில் வளர்ச்சிக்கென 5 லட்சம் ரூபாய்களை ஒதுக்கினர். பின்னர், தேவையான புள்ளி விவரங்கள் சேகரிப்பதற்காக மீண்டும் ஒரு கமிட்டி நிறுவப்பட்டது. அந்தக் கமிட்டியினர் கைத்தறித் தொழில் வளர்ச்சிக்கு மூன்று யோசனைகள் தந்தனர்.

(1) கைத்தறித் தொழிலாளருக்கு போதுமான நூல் தர வேண்டும்;

(2) அவர்கள் வேலை செய்வதற்கு தங்களின்றி போதும் கட்டுப்பாடான நூல் வினியோகம் வேண்டும்;

(3) அவர்கள் செய்த துணிகளுக்கு 'மார்க்கெட்' தேடியாக வேண்டும்—இந்த மூன்று யோசனைகளையும் அரசாங்கம் ஏற்றுக் கொண்டதுடன் அதற்கான காரியங்களையும் அவ்வப்போது செய்து வந்திருக்கின்றன.

"இப்போதுகூட, கைத்தறி நெசவாளருக்குத் தேவையான நூல் முழுவதும் தருவதற்கு, திருநெல்வேலியிலும், குடியேற்றத்திலும் தனி ஆலைகள் நிறுவுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. சட்டசபையிலும், கரை போட்ட வேஷ்டி, சேலை ஆகியவற்றின் உற்பத்தியை கைத்தறிக்கே ஒதுக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேறியுள்ளது. இந்த ஆண்டில் துணிகளின்மீது உபரி வரி போட்டு அதில் கிடைக்கும்

பொதுச் செயலாளர்

அண்ணாதுரை

சுற்றுப் பிரயாண நிகழ்ச்சி

பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்கள், தோழர்கள்: அ. பொன்னம்பலனார், ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., எஸ். எஸ். பி. லிங்கம் ஆகியவர்களுடன் கீழ்க்கண்ட இடங்களில் சுற்றுப் பயணம் செய்து, பொதுக்கூட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றுவார்கள்;

13-3-54: குடியாத்தம் — அகில இந்திய கைத்தறி வார பொதுக்கூட்டம்.

14-3-54: பெங்களூர்—திராவிட முன்னேற்றக் கழக தூத்துக்குடி நிதி அளிப்புப் பொதுக் கூட்டம்.

15-3-54: திருவண்ணாமலை — திராவிட முன்னேற்றக் கழக தூத்துக்குடி நிதி அளிப்புப் பொதுக் கூட்டம்.

20—3—54-க்கு மேல் நாகப்பட்டணம், கோடாச்சேரி திராவிட முன்னேற்றக் கழகங்கள் சார்பில் தூத்துக்குடி நிதி அளிப்புப் பொதுக்கூட்டங் கட்குச் செல்லக்கூடும்.

குறிப்பு:—சென்னை உயர்நீதி மன்றத்திலுள்ள ஐவர் அப்பீல் வழக்கு விசாரணை 8—3—54: 10—3—54: 11—3—54: தேதிகளில் குறிப்பிட்டபடி நடைபெறவில்லை. இவ்வழக்கு விசாரணை காரணமாக, அவசியம் ஏற்பட்டால் மேற்கண்ட நிகழ்ச்சிகளில் மாற்றங்களும் ஏற்படக்கூடும்.

திருமணம்

7—3—54 அன்று தோழர் எம். இருட்டினன் அவர்களுக்கும்—தோழியர் கே. புஷ்பவேணி அவர்களுக்கும் சென்னை ஏழுகிணறு மலையப்பன் தெருவிலுள்ள நாகம்மாள் பள்ளியில் தோழர் கா. அப்பாதுரையார் தலைமையில் திருந்திய திருமணம் நடந்தேறியது. அசமயம் தோழர்கள் வி. முனுசாமி, இன்மொழி, மா. இளஞ்செழியன் ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர். திருமணத்தின் நினைவாக "நம் நாடு" தின இதழ் வளர்ச்சிக்காக ரூ 1 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்-மணமக்களுக்கு நமது வாழ்த்தை உரித்தாகுக.

—(ஆ-ர்.)

பெயர் மாற்றம்

பம்பாய், மார்ச். 10—

தோழர் அ. சே நயினார் (சீர்வாகக் குழு உறுப்பினர்) நாடக நடிகருமாகிய அவர்கள் தன் பெயரை "தம்பித்துரை" என மாற்றிக் கொண்டார். அதன் நினைவாக "நம் நாடு" வளர்ச்சிக்கு 2 ரூ நன்கொடையளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றியுடைய ஈ-பொறுப்பாளர்.

சுமார் 2½ கோடி ரூபாய்களைக் கொண்டு கைத்தறி நெசவாளர் நிலை உயர ஆவன செய்து வருகிறார்கள். துணி விற்பனைக்காக, சிங்கப்பூர், ஏடன், இலங்கை, கராச்சி, பாக்டாட், மற்றும் கிழக்காசிய நாடுகளில், விற்பனை நிலையங்கள் தோற்றுவித்து, துணிகளுக்கான மார்க்கெட் தேடித் தந்து கொண்டிருக்கின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத் தக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, குரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.